யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்





# ஞானச்சுடர்

வைகாசி மலர்

1998




வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வழி

மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்.

பொருள்:

மனத்தில் அழுக்கு நிறைந்திருக்க நீரில் மூழ்குதலால் தம்மைப் பெருமையுடையவர்களாய்க் காட்டி மறைந்து வாழும் மனிதர்கள் பலர்.

ஸ்ரீ

அருணாசல அக்ஷர மணமாலை

நூல்

அருணாசலசிவ, அருணாசலசிவ,
அருணாசலசிவ, அருணாசலா!

11. ஐம்புலக் கள்வ ரகத்தினிற் புகும்போ
தகத்தினீ யிலையோ வருணாசலா (அ)

12. ஒருவனா முன்னை யொழித்தெவர் வருவா
ருன்சூ தேயிது வருணாசலா (அ)

13. ஓங்கா ரப்பொரு ளொப்புயர் வில்லோ
யுனையா ரறிவா ரருணாசலா (அ)

14. ஔவைபோ லெனக்குன் னருளைத் தந்தெனை
யாளுவ துன்கட னருணாசலா (அ)

15. கண்ணுக்குக் கண்ணாய்க் கண்ணின்றிக் காணுனைக்
காணுவ தெவர்பா ரருணாசலா (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள் வாழ்த்து

ஆதார வேதங்கள் ஆகமங்கள்
ஆதிஇதி காசங்கள் புராணமெல்லாம்
காதாரக் கேட்பதற்கும் நினைப்பதற்கும்
கருணைதரும் எம்பெருமான் கமலஞானம்
பாதார விந்தநலம் பெறுவதற்கும்
பயன்கொடுக்கும் சந்நிதியான் கலைப்பண்பாட்டு
மாதாந்த ஞானச்சுடர் மலரே, கந்தன்
மயில்சேவல் வேல்போல வாழி வாழி
தாரணியில் நிலைத்தபெரும் கற்பகம்போல்
சந்நிதியான் ஆச்சிரமக் கலைப்பண்பாட்டுப்
பேரவையின் சிவசேவை பெருகிவாழி
பெருகும்அற நெறியூட்டும் விஷயதானம்
ஆரமுதம் போல்வழங்கும் அன்பர்வாழி
ஆராய்ந்து படித்துணரும் அடியார்வாழி
பூரணமா நீதிதரும் சைவமாண்பு
பொலிசெல்வச் சந்நிதியான் அருளால்வாழி

அருட்கவி சீ. விநாசித்தம்பி
ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்,
நாகேஸ்வரம் - அளவெட்டி.

# வைகாசி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

திரு வ. வர்ணகுலசிங்கம்
(உடுப்பிட்டி)

திரு மா. சிவமூர்த்தி
(வீடியோ கலாமினி உரிமையாளர், அச்சுவேலி

திரு பொ. வியாகேசு
(பீக்கொன் கல்விநிலையம், உடுப்பிட்டி)

திரு இ. ஸ்ரீநடராசா
(ஆசிரியர்)

திரு V. சின்னராசா
(கெருடாவில்)

திரு S. நல்லையா
(கெருடாவில்)

திரு ச. கிருஷ்ணமூர்த்தி
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)

திரு வெக்டர் வேலாயுதம்
(ஆசிரியர், உடுப்பிட்டி)

திரு S. பசுபதி
(தொண்டைமானாறு)

திரு எஸ். இரவீந்திரநாதன்
கரணவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★★ ஞானச்சுடர் ★★

வெளியீடு - 2 சுடர் - 5

1998 வைகாசி

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| 1) மாணாக்கரை மேன்மைப்படுத்தும் வள்ளுவரின் கோட்பாடுகள் | 1–4 |
| 2) இறை நாமமே எமக்கு உறுதுணையானது | 5–6 |
| 3) அறுகம் புல்லின் கதை | |
| 4) கந்தன் கருணை | 8–9 |
| 5) மாணவரும் சுயவாழ்வும் | 10–11 |
| 6) வீரத்தை யாசித்தவன் | 12–15 |
| 7) மீரா அடிமை | 16–18 |
| 8) வைகாசிப் பெருவிழா | 19–21 |
| **மாணவர் பக்கம்** | |
| 9) 19ம் நூற்றாண்டு ஈழத்தமிழ் இலக்கியம் | 22–23 |
| 10) பசுமையூட்டும் பசுந்தாட்பசளை | 24 |
| 11) Easy Way to Learn English (Part 5) | 25–26 |

அன்பளிப்பு: மலர் ஒன்று 25/- ரூபா

வருடசந்தா தபால் செலவுடன் 325/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு: தமிழ்ப்பூங்கா அச்சகம்,
நெல்லியடி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானச்சுடர் - சித்திரை வெளியீடு

1998 சித்திரை மாத மலர்வெளியீடு 24-04-98 வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. இந்த மலருக்கான ஆய்வுரை யா/ சந்கோட்டை றோ. க. த. பாடசாலை அதிபர் திரு ஆ. வடிவேலு அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

ஆரம்ப உரையில் மலரின் அட்டை மங்கள்கரமாக அமைந்திருப்பது பற்றி திரு ஆ. வடிவேலு அவர்கள் சிறப்பாக எடுத்து விளக்கினார்கள். முருகக்கடவுள் உதித்த தாமரை மலரில் சுடர் பிரகாசிப்பது போன்ற வடிவில், பக்தியை ஏற்படுத்தக் கூடிய வகையில் அட்டை அமைந்திருப்பது சிறப்பான அம்சமாக விளங்குகிறது என்பதை எடுத்துக் காட்டினார்கள்.

அதன்பின்பு மலரில் இடம்பெற்ற கட்டுரைகள் ஒவ்வொன்றையும் நன்கு ஆராய்ந்து அவைபற்றிய கருத்துக்களை அடியார்களுக்கு தெளிவு படுத்தினார்கள்.

சந்நிதியில் இருந்து பல சமயத் தொண்டுகள் புரிந்து பல அடியார்களுக்கு ஆத்மீக வழிகாட்டிய மௌன சுவாமிகளின் (கடவுள்சாமி) 92வது பிறந்த தினத்தை வெளிப்படுத்தி அவர் தொடர்பான கட்டுரையையும் தாங்கி அவரின் பாதங்களுக்கு மலரினை சமர்ப்பித்தமை பேரவையின் சமயத் தொண்டினை எமக்கு புலப்படுத்துவதாக அமைந்திருப்பதையும் எடுத்துக் கூறினார்கள்.

இறுதியாக பேரவை தொடர்பான 1997 ஆம் ஆண்டு வரவு செலவு அறிக்கை மலரில் இடம் பெற்றிருப்பது பேரவையின் செயற்பாடுகளை முக்கியமாக நிதிதொடர்பான செயற்பாடுகளை வாசகர்களும் மற்றவர்களும் அறிந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பதையும் குறிப்பிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

## வைகாசிப் பெருவிழா - 1998

காலம்:- 1998-06-14 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.00 மணி

இடம்:- சந்நிதியான் ஆச்சிரம மண்டபம்

தலைவர்:- நல்லை ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

விருது பெறுபவர்: சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

விருது வழங்குபவர்:- வல்லை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் அவர்கள்

வாழ்த்துரைகள்:- சமயப் பெரியார்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

கலை நிகழ்வு:- துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள்.



சைவத்தையும், தமிழையும், எமது பண்பாட்டையும் தனது உயிருக்குச் சமனாக மதித்து அவற்றைப் பேணி, வளர்த்து வருவதுடன், பழுத்த வயதிலும் பல்வேறு சமூகத் தொண்டுகளை ஆற்றிவரும் பண்புடைத் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்களுக்கு வழங்கப்படும் இந்த விருது எமது பேரவையால் வழங்கப்படும் விருது என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட வடமராட்சி மக்களால் அம்மையாருக்கு வழங்கப்படும் கௌரவம் என்று கூறுவதே பொருத்தமானது.

அன்றையதினம் ஆலயத்தில் நடைபெறும் விஷேச பூசைகளில் கலந்து கொண்டு கலியுகக்கந்தனின் அருளைப் பெறுவதுடன், யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் பல பெரியோர்கள் கலந்து கொள்ளவிருக்கும் இவ்விழாவில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நன்றி

பேரவையினர்

## அறுபத்துமூவர் குருபூசை மண்டபம்

முருகேசு சுவாமிகளின் ஞாபகார்த்தமாக அவருடைய அடியார்களால் புதிதாக அமைக்கப்பட்ட மேற்படி அறுபத்துமூவர் குருபூசை மண்டபம்

**14-06-98இல் அதாவது வைகாசிப் பெருவிழா நடைபெறும்**

அதே தினம் மங்களகரமாக திறந்து வைக்கப் படவுள்ளது என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

## (மகாபாரதத்திலிருந்து)

## தலைமகன் யார்?

இவ்வண்ணம் தேவயானி மனமகிழ்வுடன் நன்னாட்களைக் கழித்து வந்தாள். சர்மிஷ்டை தாதியர் குழுவிருந்து தேவயானிக்குப் பணிவிடைசெய்து வந்தாள். இவ்வாறு இருக்கும் ஓர் நாளில் கானகத்துக்குச் சென்று களிப்புடன் ஆடிப்பாடி மகிழ்ந்திருந்த வேளை யயாதி என்னும் மன்னன் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தான். யயாதி மன்னனைக் கண்ட தேவயானியின் உள்ளம் அவன்பால் சென்றது. அவனை மணக்கும் விருப்புடன் அவனை யாரென வினாவினாள். (இச்சந்திப்பு அநேக ஆண்டுகளின் பின் இரண்டாவது முறையாக நடந்தமையால் உடனே இருவரும் ஒருவரையொருவர் அறிந்திருக்கவில்லை) ஆனால் யயாதி மன்னனின் உள்ளமோ சர்மிஷ்டைபால் சென்றது. இதனால் தேவயானியின் வேண்டுதலை நிராகரித்தான். தேவயானி மீண்டும்மீண்டும் வற்புறுத்தினாள். அந்தணகுலப்பெண் அரசனை மணந்தல் முறையாகாதென்று கூறி யயாதி மன்னனோ மறுத்து நின்றான். அத்துடன் சுக்கிராச்சாரியாரின் மகிமை அறிந்தும் அச்சங்கொண்டான். தேவயானி தொடர்ந்தும் வற்புறுத்தியமையால் உன் தந்தையின் சம்மதமிருந்தால் நின்னை மணம் முடிக்கின்றேனென்று ஒருவாறு இணங்கி நின்றான். இதனால் மகிழ்வுற்ற தேவயானி தந்தையாகிய சுக்கிராச்சாரியாரை அவ்விடத்துக்கு வரவழைத்து தன்னுளக்கிடக்கையை எடுத்தியம்பினாள். தேவயானியின் உரைகளைச் செவியுற்ற சுக்கிராச்சாரியார் யயாதி மன்னனை நோக்கி மன்னா என் புதல்வி உன்னை மணம்புரிய விரும்புவதால் உனக்கு அவளை மணம் முடித்துத் தருகின்றேன். ஆயின் ஓர் நிபந்தனைக்கு உடன்படுதல் வேண்டும். தேவயானியின் தாதியாக இருக்கும் சர்மிஷ்டை தேவயானியுடன் இருந்து பணிவிடை செய்வாள். ஆனால் சர்மிஷ்டையும் அழகில் சிறந்தவள் இதனால் உன்மனம் அவளை நாடுதல் கூடாது. இதனை நீ கடைப்பிடித் தொழுகுதல் வேண்டும்.

இதற்குடன்பட்டு யயாதி மன்னன் தேவயானியையும் சர்மிஷ்டையையும் தாதியர்களையும் தன்னகருக்கு அழைத்துச் சென்றான். அங்கே திருமணம் சிறப்பாக நடந்தேறியது. யயாதி மன்னனும் தேவயானியும் இல்லறமாம் நல்லறத்தை மேற்கொண்டு யது, துர்வசு என்னும் இருபுதல்வர்களைப் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். சர்மிஷ்டையின் அழகால் வசீகரிக்கப்பட்ட யயாதி மன்னன் அவள்பால் அன்புபூண்டு பழகிவந்தான். இதனால் யயாதி மன்னனுக்கும் சர்மிஷ்டைக்கும் திருகயு, அனு, புரு என்னும் மூன்று புதல்வர்கள் பிறந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யயாதி மன்னன் சர்மிஷ்டைக்கு நந்தவனத்தில் ஓர் தனிமாளிகை அமைத்துக் கொடுத்தமையால் சர்மிஷ்டையின் குழந்தைகளை தேவயானி அறிந்திருக்கவில்லை. ஒரு நாள் யயாதி மன்னனுடன் நந்தவனத்தில் உலாவந்த தேவயானி அழகே உருவெடுத்தாற்போல் விளங்கிய அம்மூன்று குழந்தைகளையும் கண்டு ''யாருடைய குழந்தைகள் இவர்கள்'' என்று மன்னனை வினாவினாள். விடையொன்றும் பகராது மன்னன் மௌனமாக விருந்தான். இதனால் தேவயானி அக்குழந்தைகளை நோக்கி குழந்தைகளே நீங்கள் யாருடைய குழந்தைகள்'' என வினாவினாள். அப்பொழுது குழந்தைகள் இவர்தான் எம் தந்தையென யயாதி மன்னனைச் சுட்டிக்காட்டினர். அப்படியாயின் உங்கள் தாய் யாரென தேவயானி வினாவினாள் தங்கள் தாய் சர்மிஷ்டையெனக் குழந்தைகள் பகர்ந்து நின்றனர். இதனைச் செவியுற்ற தேவயானி மிகக் கோபமடைந்தவளாய் சர்மிஷ்டையை அவ்விடத்துக்கு வரவழைத்து ''பெண்ணே நீ எனது பணிப்பெண்ணாக இருந்து எனக்குத் துரோகமிழைத்து விட்டாய் நீ அசுர குலத்திலுதித்தவளாகையால் இவ்வண்ணம் நடந்து கொண்டிருக்கிறாய் இது மிகவும் இழிவான செயல்'' என்று அவளைக் கடிந்தாள். ஆனால் சர்மிஷ்மை ஆணவத்துடன்'' யான் உலக்கு ஏன் பயப்பட வேண்டும் என்று தன்னுடைய செயலுக்கு நியாயம் கற்பித்து வாதாடினாள். இதனால் ஆத்திரமுற்ற தேவயானி யயாதி மன்னனை வெறுத்தொதுக்கி தன் தந்தையாகிய சுக்கிராச்சாரியாரைச் சென்றடைந்தாள் கோபமுற்றுச் சென்ற தேவயானியைத் தொடர்ந்து சென்ற யயாதி மன்னன் சுக்கிராச்சாரியாரை சென்றடைந்து வணங்கி நின்றான்.

தந்தையை அணுகிய தேவயானி ''தந்தையே இவர்தாங்களிட்ட கட்டளையை மீறி சர்மிஷ்டையுடன் பழகி மூன்று புதல்வர்களையும் பெற்றுள்ளார்.'' என்று கவலையுடனும் கோபத்துடனும் கூறி நின்றாள். இதனைச் செவியுற்ற சுக்கிராச்சாரியார் மன்னனை நோக்கி ''மன்னா ஒழுக்கம் தர்மம் ஆகியவற்றின் மேன்மைகளை நீ அறிந்திருந்தும் அதனைக் கைக்கொள்ளாது விட்டு என் கட்டளையையும் மறந்து தீயவழியில் சென்றுள்ளாய் இதனால் இளமை கொண்டு இன்புற்ற நீ இளமை அழிந்து மூப்படைவாயாக என்று சுக்கிராச்சாரியார் சாபமிட்டார்.

சுக்கிராச்சாரியாரின் சாபத்தினால் இளமையகன்று முதுமையுற்ற யயாதி மன்னன் மிகக் கவலையுடன் ''சுவாமி இதனை நீக்குவதற்கு வழியாது? தயவு செய்து விமோசனம் தந்தருள்வீர் எனப் பணிந்து நின்றான். '' உனது முதுமையை யாராவது ஒருவர் உவந்து ஏற்று உனக்குத் தங்கள் இளமையை அளிக்க விரும்பினால் நீ என்னை நினைந்து அவர்கட்கு உன்முதுமையை அளிந்து நீ இளமை பெறுவாய் என்று சுக்கிராச்சாரியார் சாபவிமோசனமளித்தார்.

இதனை அகமகிழ்வுடன் உளங் கொண்ட மன்னன் ''சுவாமி என்புதல்வர்களில் ஏவராயினும் தன் இளமையை எனக்கு அளிக்க முன்வந்தால் எனது இராஜ்யம் முழுவதும் அவனுக்கே உரிமையாகும் அவன் நீண்ட ஆயுளும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ தாங்கள் ஆசீர்வதிக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்' பின் யயாதி மன்னன் தனது மூத்த புதல்வனான யதுவை அழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகனே சுக்கிராச்சாரியாரின் சாபத்தால் முதுமையடைந்துள்ளேன், உனது இளமையை ஆயிரம் ஆண்டுகள் எனக்குத் தந்து அதன் பின் உனது இளமையை மீண்டும் பெறுவாயாக. இது சுக்கிராச்சாரியாரின் அருளால் பலிதமாகும். எனவே உனது இளமையைத் தந்து எனது ஆசையைப் பூர்த்தி செய்வாயாக" எனப்பகர்ந்தான். அதற்கு யது "தந்தையே தங்களுக்குக் கிடைத்துள்ள மூப்பைப் பெற்றுக் கொள்ள எனக்கு விருப்பமில்லை. மூப்படைந்தவர்களை ஒருவரும் மதிக்கமாட்டார்கள். என் தேவைகளை நிறைவேற்றுவதற்குக் கூட அடுத்தவர் உதவியை நாட வேண்டியிருக்கும் எனவே தங்களது மூப்பை யான் பெற்றுக்கொள்ள முடியாது." என்று மறுத்துவிட்டான். இதனால் கோபமடைந்த யயாதி மன்னன் என் வேண்டுகோளை நிராகரித்தமையால் என் ராஜ்யத்தில் உனக்கு ஒன்றும் உரிமை கிடையாது. என்று யதுவுக்குச் சாபமிட்டான்.

இதன்பின்பு தனது இரண்டாவது புதல்வனாகிய துர்வசுவை வரவழைத்து தனது வேண்டுதலை எடுத்தியம்பினான். அதனைச் செவியுற்ற துர்வசு "அப்பா நான் முதுமையடைவேனாகில் இன்பங்களை என்னால் அனுபவிக்க முடியாது. ஆற்றலுடையவனாக விளங்க முடியாது எனவே என்னால் தங்கள் மூப்பை ஏற்றுக் கொள்ள முடியாது" எனப்பகர்ந்தான். அவனது கூற்றைக் கேட்ட யயாதி மன்னன் மிகவும் கோபமடைந்து "உனது வம்சத்தினர் துன்பமடைந்து அல்லலுறுவர்" துர்வசுவுக்குச் சாபமிட்டான்.

பின்னர் மன்னன் சர்மிஷ்டையின் புதல்வர்களுள் மூத்தவனாகிய திருஹ்யுவை அழைத்து தனது கோரிக்கையை எடுத்தியம்பினான். அதற்குத் திருஹ்யு "தந்தையே முதுமையினால் நான் தவிக்கவனாவேன் எனது வாழ்க்கை சலனமற்றதாகிவிடும் எனவே யான் தங்கள் கோரிக்கையை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறேன்" என்று விளம்பினான். அவன் சொல்லினைக் கேட்ட செவியுற்ற யயாதி மன்னன் "வாழ்வின் இன்பங்களேதும் உனக்குக் கிட்டாதொழிக" எனத் திருஹ்யுக்குச் சாபமிட்டான். அதனைத் தொடர்ந்து சர்மிஷ்டையின் இரண்டாவது மைந்தனாகிய "அனு" விடம் தனது உள்விருப்பத்தைத் தெரிவித்தான். அதற்கு அப்புதல்வன் "தந்தையே மூப்படைந்து தளர்வுற்றவர்கள் பெருந்துன்பமெய்துவர். சொந்தமிய செயல்கள் எவற்றையும் அவர்களால் செய்ய முடியாது ஆகவே தங்களது முதுமையைப் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை" யென்று மறுத்துரை சொன்னான். இதனைச் செவியுற்றுச் சினங் கொண்ட யயாதி மன்னன் "புதல்வனாகிய நீ என் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவில்லை எனவே உன் வம்சத்தினரெல்லாம் இளமையிலேயே இறக்கக் கடவர்" என அனுவுக்குச் சாபமிட்டான்.

பின்னர் தனது இளைய குமாரனாகிய பூருவை அழைத்து "மகனே நீதான் மிகவும் சற்குணங்கள் உடைய புதல்வன் எனவே எனது வேண்டுதலை நீ நிறைவேற்றுவாய் என்று நம்புகின்றேன்" என்று கூறித் தனது கோரிக்கையைப் பூருவிடம் எடுத்துரைத்தான். உத்தம புதல்வனாகிய பூரு "தந்தையே தங்களது மூப்பினை ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கின்றேன். தாங்கள் விரும்புங்காலம் வரை இளமையுடன் இருந்து வாழ்க்கையை அனுபவியுங்கள் தாங்கள் விரும்பினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூப்பைப் பெற்றபின் யான் தங்களுக்கு என்னாலியன்ற சேவைகளைச் செய்கின்றேன்'' என்று கூறிப் பணிந்து நின்றான். இவ்வுரைகளால் மனமகிழ்வெய்திய யயாதி மன்னன் ''தந்தை சொல்லை சிரமேற்கொண்ட உன் உத்தம செயலால் நான் பெரு மகிழ்வெய்துகின்றேன். என் கோரிக்கையை நிறைவேற்றியமையால் எனது இராஜ்யம் உனது உரிமையாகிறது நீயும் உன்குடிமக்களும் சகல சம்பத்துக்களையும் பெற்று பெருமகிழ்வுடன் வாழ்வீர்களாக'' எனப் பூருவுக்கு வரம் தந்தான். பின்னர் சுக்கிராச்சாரியாரை நினைத்து வணங்கி தனது முதுமையை அளிந்து பூருவின் இளமையைப் பெற்றுக் கொண்டான்.

இளமையைப் பெற்றுக்கொண்ட யயாதி மன்னன் மகிழ்வுடன் அறவழியில் தன்வாழ்க்கையை மேற்கொண்டொழுகி வந்தான். ஆயிரம் ஆண்டுகளின் பின் பற்றுக்களைத்துறந்து தவவாழ்வை மேற்கொள்ள விரும்பி பூருவுக்குத் தன் இளமையை மீண்டும் அளித்து முதுமையைப் பெற்றுக் கொண்டான். பூருவுக்கு மகுடாபிஷேகம் செய்து அவனிடம் ஆட்சியை ஒப்படைத்தான். பூருவிடம் ஆட்சியை ஒப்படைத்தமையைக் கண்ட அறிஞர்களும் அந்தணப் பெரியோர்களும் அரசனை அணுகி பூருவுக்கு இராஜ்ய உரிமையை அளித்தமையை ஆட்சேபித்தனர். அதற்கு யயாதி மன்னன் ''புதல்வனாக இருப்பவன் ஒருவன் தந்தையின் கட்டளைகளைச் சிரமேற் கொண்டொழுக வேண்டும். முதற் பிறந்தமையால் ஒருவன் தலைமகன் ஆகிவிட முடியாது தகமைகளால் தான் ஒருவன் தலைமகன் ஆதல் முடியும். தந்தை தாயாரின் கருத்துக்களை உவந்தேற்று எவனொருவன் நடக்கிறோனோ அவனே தலைமகனென்று வேதங்கள் வரையறை செய்துள்ளன. வயதில் இளையோனாகிலும் ஒழுக்கத்திலும் சீலத்திலும் உயர்ந்தவனே தலைமகனென்று கருதப்படுகிறான் எனவே யான் பூருவுக்கு இராஜ்ய அபிஷேகம் செய்தது தர்மத்தின் பாற்பட்டதே'' என்று யயாதி மன்னன் மொழிந்துரை செய்தான். பின்னர் யயாதி மன்னன் கானகம் புகுந்து தவவாழ்வை மேற்கொண்டான். தேவயானியும் சர்மிஷ்டையும் மன்னன் வழியே சென்றனர்.

ஃ ஆகாயத்தில் மேகங்கள் தோன்றிச்சூரியனை மறைக்குமானால் அதன் பிரகாசமும் மறைந்து போகும். அது போல மனத்தில் அகங்காரம் இருக்கும் வரையில் அதில் ஈசுவர ஜோதி பிரகாசிக்காது.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

''சர்வம் சிவமயம்''

# இறை நாமமே எமக்கு உறுதுணையானது

ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான், அவன் ஒரு நாமம் ஒருருவம் இல்லாதவன். அவன் பல்வேறு காலங்களில் பல்வேறு வடிவம் கொண்டு அருள்புரிபவன். பல்வேறு சமயத்தவர்கள் பல்வேறு பெயர் கொண்டு ஆண்டவனை வழிபட்டனர். மக்களுக்கு இடுக்கண் நேரும் போது பல உருவம் தாங்கித் துன்பங்களைக் களைந்தெறிபவன்; இதனை ஞானியர் தம் மலர்க்கண்ணாற் கண்டு நமக்குக் கூறுவர்.

அல்லற்படும் மக்கள் அக்காலத்தில் யாகம் வளர்த்துத் தம் அல்லலைத் தீர்த்தனர். பின் கோயில் வழிபாடு மூலம் அல்லலைத் தீர்த்தனர். தற்போ விஞ்ஞான காலமாகிய இக்காலத்தில் இறை நாமத்தைப் பாடியும், செபிப்பதன் மூலமும் ஆண்டவனை வழிபட்டுத் தம் இடுக்கண்களைத் தீர்த்தனர். இறைவன் அடியவர்க்கு எளியவன் அல்லவா? தன் பெயர் கேட்டவுடன் ஓடிவரும் குழந்தை போலத் தன் நாமம் கேட்டவுடன் ஓடிவருவான் என்பதில் சந்தேகமேயில்லை.

தன் நாமம் கேட்டவுடன் இறைவன் ஓடிவருவான் என்பதைப் புராணங்கள் பல உதாரணங்கள் மூலம் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. தந்தையைக் காணாது தனியே ''அம்மையே அப்பா'' என்று கூறியவுடன் ஞானப்பால் கொடுத்து ஞானக் குழந்தையாக்கிப் பாடுவித்தவன் இறைவனன்றோ, நாவுக்கரசர் சூலை நோயால் வருந்தும் போது இறை நாமம் பாடியவுடன் சூலை நோயைத் தீர்த்தவர். அவரைக் கல்லிற் கட்டி கடலில் இட்டபோது ''நற்றுணையாவது நமச்சிவாயவே'' என நாவுக்கரசர் பாடியவுடன் கல்லைத் தெப்பமாக மிதக்க விட்டுக் கரை சேர்த்தவர் இறைவனே.

இராமநாமம் செபித்து அகலிகை சாபம் நீங்கியதும், கடலைக் கடக்க அநுமான் இராமநாமம் செபித்ததும் இராமாயணம் எமக்குக் காட்டும் உதாரணங்களாகும். அது மட்டுமா? அசோக வனத்தில் சீதை தற்கொலை புரியச் சென்ற போது இராம நாமம் ஒலித்துக் கொண்டு அநுமான் அங்கு வந்ததும் சீதையின் அச்செயல் தடைப் பட்டது. உடனே அனுமனைப் பார்த்துச் சீதை,

''அரக்கனே யாக, அன்றி அமரனே யாக
குரக்கினத் தலைவனே யாக கொடுந்தொழில் தீயோனாக,
இரக்கமே யாக வந்து எம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினை தந்தென் உணர்வையும் உயிரையும் தந்தாய்''

என்று கூறுவதாக இடம் பெற்றுள்ளது.

துச்சாதனன் திரௌபதியின் துகில் உரியும் பொழுது திரௌபதி 'கண்ணா கண்ணா' என்றழைத்தவுடன் கண்ணபிரான் வந்து மானம் காத்தார். இதனை ஆழ்வார் ஒருவர் குறிப்பிடுகையில்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எய்ப்பு என்னை வந்தெய்தும் போது
அப்போதைக்கு நான் உன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக்கு இப்போதாய் சொல்லி வைத்தேன்
அரங்கினில் உறையும் பள்ளியனே' எனக் குறிப்பிடுகின்றார்.

எங்கும் அறம் மெலிந்து மறம் ஓங்கி உலகை ஆட்டுவிக்கின்றது. எங்கும் கொலை எங்கும் அநீதி, எங்கும் அடக்குமுறை என அதர்மம் தலைவிரித்து ஆடுகின்றது. 'தொல்லையிரும் பிறவிச் சூழும் தளைநீக்கி அல்லல் அறுத்து ஆனந்தமாக்குவதற்கு நற்றுணையாவது நமச்சிவாயவே' கையில் மருந்தை வைத்துக் கொண்டு நாம் ஏன் அல்லற்பட வேண்டும்? இறைவனைநினைத்து நெக்கு நெக்கு உருகி நெகிழ்ந்து பாடி னால் இறைவன் எம்மிடம் ஓடிவருவான்.

அல்லற்படும் மக்களின் வாயில் இறைநாமம் தானாகவே வந்து விடும். பலர் முதற்கடவுளாகவும், தம் குல தெய்வமாகவும் பல தெய்வங்களை வழிபடுகின்றனர். ஞானிகள் சுவாமி நாதனையும், வீரர்கள் தேவசேனாதிபதியையும் தமது நிலைக்கு ஏற்றவாறு முழுமுதற் கடவுளாக வழிபடுகின்றனர். அவர்களுக்குத் துன்பம் ஏற்ப டும் போது அவர்களின் முழு முதற் கடவுளின் பெயரே வாயில் வரும். பலர் தம் இஷ்ட தெய்வத்தின் திருநாமத்தை அப்பியாசக் கொப்பிகளில் நூற்றெட்டுத்தரம் அல்லது ஆயிரத்து எட்டுத்தரம் தினம் எழுதுகின்றனர். உதாரணமாக 'ஸ்ரீராமஜெயம் 'ஓம் சரவணபவ' 'நமசிவாய' என்பன போன்ற வாக்கியங்களை எழுதுகின்றனர். பலர் அவற்றை ஜெபிக்கின்றனர். இவ்வகையான காரியங்கள் மனிதற்குத் துன்பம் அகற்றி இன்பமூட்டுகின்றன. ஆகவே, நம் வாழ்விற்கு இறைநாமம் மிகவும் உறு துணையானது.

'இறை நாமத்தை எப்பொழுதும் பாடி, வழிபட்டு எம் தேவையைப் பெறு வோமாக'

'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'

'சமூகமணி' சி. சி. வரதராசா.
16 - 03 - 98
பொதுச்செயலாளர்,
யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை.

ஃ மழைத் தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை. பள் ளமான இடத்துக்கு ஓடிவந்து விடுகிறது. அதுபோல் இறை யருள், தற் பெருமையும், கர்வமும் உள்ளவர்களுடைய உள் ளத்தில் தங்கி நிற்பதில்லை; பணிவுள்ளவர்களின் உள்ளத் தில்தான் தங்கி நிற்கும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுகம் புல்லின் கதை

பிள்ளையாருக்கு அறுகம் புல்லினால் அர்ச்சனை செய்யும் வழக்கம் இருந்து வருகிறது. இந்த வழக்கம் எப்படி வந்தது என்பதற்கு ஒரு கதை உண்டு. இது தான் அந்தக் கதை.

விநாயகப் பெருமானிடம் படைப்புக் கடவுளாகிய பிரமதேவனும் முப்பத்து முக்கோடி தேவர்களும் வந்து வணங்கி 'சுவாமி அனலாசுரன் என்ற அசுரன் எங்களையும் துன்புறுத்துகிறான்' அவனது தொந்தரவு தாங்க முடியவில்லை அவன் தன் வாயிலிருந்து நெருப்பை கக்குகிறான் அவன் அருகிலேயே போக முடியவில்லை, ஆனைமுகப் பெருமானே! உலகத்தை துன்புறுத்தி வந்த பல அசுரர்களைகொன்று ஒழித்தீர்கள் இந்த அனலாசுரனையும் கொன்று எமது துயரை நீக்கியருளும் என்று வேண்டி நின்றார்கள். தேவாதி தேவர்களே! இனி நீங்கள் அந்த அனலாசுரனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை புறப்படுங்கள் என்று விக்கினங்களை தீர்த்தருளும் விக்கினேஸ்வரர் திருவாய் மலர்ந்தருளினார்.

விநாயகர் போருக்குப் புறப்பட்டார் அவருடன் அவரது படைகளும் கிளம்பின அனலாசுரன் நெருப்பை கக்கியே பிறரை எரித்து விடக் கூடிய வரம் பெற்றிருந்தான். அந்த வரத்தின் மூலம் விநாயகரது படைகளை பொசுக்கினான். விநாயகர் தொடர்ந்தும் போர் செய்து அனலாசுரனை கொல்ல முடியவில்லை. பிள்ளையார் உடனே அனலாசுரனை தூக்கி விழுங்கி விட்டார். வயிற்றுக்குள்ளே போன அனலாசுரன் அங்கும் சும்மா இருந்தானில்லை தன் வாயால் நெருப்பை விட்டுக் கொண்டே இருந்தான். அனலாசுரனது நெருப்பினால் பிள்ளையாருக்கு வயிறு தகிக்கத் தொடங்கியது. தகிப்பை தாங்க முடியாது எரிகிறதே எரிகிறதே என்று துள்ளிக் குதித்தார். தேவர்கள் விநாயகருக்கு அபிஷேகம் செய்தார்கள். பனிக் கட்டியை கொண்டு வந்து விநாயகர் தலைமீது வைத்தார்கள் பிறகு சந்திரனின் நிலவைப் பொழிந்தார்கள். இவ்வாறு பற்பலவும் செய்தும் விநாயகரது வயிற்று தகிப்பை அடக்க முடியவில்லை.

அப்பொழுது ஒரு ரிஷி கை நிறைய அறுகம்புல் கொண்டு வந்து பிள்ளையார் தலைமீது வைத்தார். என்ன ஆச்சரியம் பிள்ளையாரது வயிற்று தகிப்பு அடங்கியது அனலாசுரனும் வயிற்றிலே ஜீரணம் ஆகிவிட்டான். இதனால் பிள்ளையாருக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை 'இன்று முதல் என் அருளை வேண்டுபவர்கள் அறுகம்புல்லினால் என்னை அர்ச்சிக்க வேண்டும் அதுவும் இரண்டு அறுகம் புல்லை எடுத்துப் போட வேண்டும் என்று கணபதி திருவாய் மலர்ந்தருளினார். அன்று முதல் பிள்ளையாருக்கு அறுகம் புல்லால் அர்ச்சனை செய்யும் வழக்கம் ஏற்பட்டது.

முற்றும்

செ. செல்வரஞ்சனா
சுன்னாகம் கிழக்கு.
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தன் கருணை

1987ம் ஆண்டு இராணுவ நடவடிக்கையினால் மூடப்பட்டிருந்த ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் முருகேசு சுவாமிகளின் முயற்சியால் பலதிருத்த வேலைகள் செய்யப்பட்டு 1988ஆம் ஆண்டு பங்குனி மாத கும்பாபிஷேகத்துடன் நித்திய பூசைகள் ஆரம்பமாகின. இந்தக் கும்பாபிஷேக நிகழ்வு 45 நாட்கள் தொடர்ச்சியாக மண்டல அபிஷேகங்கள் செய்யப்பட்டு இறுதியில் சங்காபிஷேகத்துடன் பூர்த்தியானது. இவ்வாறு தொடங்கிய நித்திய பூசை பல பிரச்சினைகள், குழப்பங்கள் ஏற்பட்டு மக்கள் இடம்பெயர்ந்த நிலையிலும் இன்று வரை தொடர்ந்து நடை பெற்றுக்கொண்டிருப்பது உண்மையில் ஒரு அதிசய நிகழ்ச்சியாகும். இதற்கு அங்கே நித்திய பூசையை மேற்கொண்டு வருகின்ற ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பூஜகர்கள் முருகப்பெருமான் மீது கொண்டுள்ள ஆழமான பக்தியும், அசையாத நம்பிக்கையும் மட்டுமின்றி எவ்வளவு பிரச்சினைகள் எறிகணை வீச்சுக்கள் நடைபெற்றாலும் நித்திய பூசையை இடைநிறுத்தாது தொடர்ந்து நடாத்தியே தீரவேண்டும் என்ற அவர்களின் திடமான மனஉறுதியும் முக்கிய காரணமாகும்.

கும்பாபிஷேகம் மேற்கொள்ளப்பட்ட தினத்தை நினைவு கூர்ந்து வருடா வருடம் அத்தினத்தில் அதாவது தமிழிற்கு பங்குனி மாதம் வளர்பிறையில் வரும் அச்சுவினி நட்சத்திரத்தில் இன்றும் விசேஷ அபிஷேகங்கள், சண்முகார்ச்சனை என்பன தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அத்துடன் அத்தினங்களில், நித்தியபூசையை மேற்கொள்ளுகின்ற பிரதான பூசகர்களுக்குப் புதிய வேட்டி சால்வைகளை முருகேசு சுவாமிகள் வழங்கி வருவதும் வழக்கம் மேலும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நித்திய பூசை நடைபெறும் பொழுது ஊதியம் வாங்காது தவில் வாசிப்பதை ஒரு தொண்டாகக் கருதி அதனை நாள் தவறாது பூசை தவறாது நிறைவேற்றி வருபவர் திரு அமிர்தலிங்கம் அவர்கள். இந்த வகையில் இவரையும் ஒரு பூசகருக்குச் சமனாகக் கருதி இவருக்கும் புதிய வேட்டி சால்வைகளை கும்பாபிஷேக தினத்தில் முருகேசு சுவாமிகள் வழங்கி வந்தார்கள். 1995ஆம் ஆண்டு கும்பாபிஷேக தினக்காலத்தில் திரு அமிர்தலிங்கம் அவர்களை முருகேசு சுவாமிகள் சந்திக்க முடியாது போனதால் அவருக்குரிய பொதியினை முருகேசு சுவாமிகள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி திரு செ. மோகனதாஸ் மூலம் கிடைக்கச் செய்தார்கள்.

அவ்வாறு பெற்றுக்கொண்ட பொதியில் வழமைபோல வேட்டியும் சால்வையும் இருக்கும் என்பதைத் தெரிந்துகொண்ட திரு. அமிர்தலிங்கம் அவர்கள் அடுத்த நாள் அதாவது கும்பாபிஷேக தினத்தன்று காலையில் அந்தப் பொதியைப் பிரித்துப் பார்த்த பொழுது அதற்குள் வேட்டி மாத்திரம் இருந்தது. அதனை அவதானித்த அமிர்தலிங்கம் அவர்கள் சாமியார் சால்வையை வைக்க மறந்து விட்டார்கள் போலும் என்று நினைத்துக் கொண்டு அந்த வேட்டியை அணிந்துகொண்டு தமது கடமையை ஆற்றுவதற்குக் கோவிலுக்குப் புறப்பட்டார்கள். கோயிலுக்குச் சென்ற திரு. அமிர்தலிங்கம் அவர்கள் அங்கே முருகேசு சுவாமிகள் யாரையோ தேடியபடி அங்கும் இங்கும் பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதைக் கண்டு சாமியாரிடம் சென்று என்ன பார்க்கிறீர்கள் யாரைத் தேடு கிறீர்கள் என்று கேட்டார். உடனே சாமியார்

> ''ஐயா உங்களால் நான்படும் கஷ்டம் போதும் இரவு முருகன் வந்து தன்னுடைய அன்பனுக்கு ஏனடா சால்வை கொடுக்கவில்லை என்று என்னிடம் கேட்டார்''

என்று கூறி ஒரு சால்வையை அவருக்கு வழங்கினார்கள். திரு. அமிர்தலிங்கமும் அன்புடன் சால்வையைப் பெற்றுக்கொண்டார்கள்.

இதன்பின்பு இரண்டு கிழமைகள் கடந்து ஒரு வெள்ளிக்கிழமை பூசை ஆரம்பமாகின்ற நேரம் திரு அமிர்தலிங்கம் அவர்கள் தமது நித்திய முறையில் வாசிப்பதற்காக கோவில் வாயிலில் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார் அப்பொழுது முருகேசு சுவாமிகள் அங்கே வந்து சேர்ந்தார்கள் அவர் திரு அமிர்தலிங்கம் அவர்களைக் கண்டவுடன்

> ''ஐயா உங்களால் நான்படும் தொல்லை தாங்க முடியவில்லை, என்ன துவாய் என் தொண்டனுக்குக் கொடுத்தீர் தினமும் தவில் காவுவதால் அவனுக்குத் தோள் கழுக்கின்றது பெரிய துவாயாக வாங்கிக் கொடு என்று முருகன் என்னை நித்திரை கொள்ள விடுகிறார் இல்லை''

என்று கூறிவிட்டுத் தயாராக வைத்திருந்த ஒரு பெரிய துவாயை அமிர்தலிங்கத்தின் தோள் மீது போட்டு அவனுக்கு அதனைப் போர்த்து விட்டார்கள் அத்துடன் அமிர்தலிங் கம் அவர்களைப் பார்த்து முருகேசு சுவாமிகள் தமது வழமையான புன்சிரிப்புடன் ''இனிமேல் நோவு இல்லாமல் அடியுங்கள் ஐயா'' என்று உள்ளத்திருப்தியுடன் கூறினார்கள்.

தன்னையும் ஒரு பொருட்டாகக் கருதி தன் மீது இரக்கம் கொண்டு கருணைகாட்டு கின்ற ஆறுமுகசாமியாரின் கருணை நினைத்த பொழுது திரு அமிர்தலிங்கம் அவர் களின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் ததும்பியது. இது போன்ற பல அற்புதமான அனுபவங்களைச் சந்நிதியிலிருந்து அனுபவித்து வரும் அமிர்தலிங்கம் அவர்கள் இதுவும் கந்தக் கடவுளின் கருணை நிறைந்த ஒரு திருவிளையாடல் என்பதை உணர்ந்தவராக உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருக்கும் பக்தி உணர்வுடன் அன்றைய தவில் வாசிப்பை ஆரம்பித்தார்.

திரு ந. அரியரத்தினம்
தொண்டைமானாறு

குறிப்பு: சந்நிதி முருகப்பெருமானுடைய இவ்விதமான அற்புத நிகழ்வு கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மலரிலும் வெளிவருகின்றது இவ்வாறான அற்புத நிகழ்வுகளை அனுபவித்த அன்பர்கள் தகுந்த ஆதாரத்துடன் விளக்கமாக குறிப்பிட்டு எமக்கு எழுதி அனுப்பினால் அவற்றையும் இத்தொடரில் இடம் பெறச் செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரும் சமயவாழ்வும்

நாம் வாழும் உலகில் பல சமயங்களைச் சேர்ந்த மக்களைக் காணமுடிகிறது. சமயவாழ்வு எனும்போது ஒருவர் நான் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவரோ அந்தச் சமய நெறிமுறைகளின்படி வாழ்வதையே குறிப்பதாகும். மாணவரும் சமயவாழ்வும் எனும் போதும் மாணவர் கற்கும் கல்வி, ஒழுக்கம் என்பன அவர்களுக்கு வாழ் நாள் முழுவதும் நன்மை பயக்க வேண்டு மென்பதே கருத்தாகும்

எல்லாச் சமயங்களும் ''உயிர்க் கொலை செய்யாதே'' என்று போதிக்கின்றன. இதைப் பின்பற்றும் மாணவர்கள் கொலைக் குற்றம் புரிய மாட்டார்கள். அதனால் கொலைக் குற்றவாளியாக மாட்டார்கள். இதன் காரணமாக மரண தண்டனைக்குள்ளா கவும் மாட்டார்கள். ''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' எனும் முதுமொழிக் கிணங்க நாம் செய்யும் பாவங்கட்கு அதற்குரிய பயனைப் பின்னர் அனுபவிக்க வேண்டி வரும். கொலை, கொள்ளை, களவு, மது எனும் தீங்குகளையும் தடுப்பது சமயவாழ்வு எனலாம்;

பிரச்சினைகள் நிறைந்த இவ்வுலகில் ஒன்றுமே நிலையற்றது எனும் பேருண் மையை விளக்குவதும் சமய வாழ்வே ''உயிர்கள் மீது கருணை காட்ட வேண்டும்' என்று எல்லா மதங்களும் கூறுகின்றன. இதனைக் கடைப்பிடிக்கும் மாணவர்கள் உயிர் களை அன்பாக நேசித்துக் கருணையுள்ளத்துடன் வாழலாம். எல்லோருக்கும் அவசிய மான சமயவாழ்வு மாணவர்கட்கும் அவசியம் என்பது சொல்லித்தான் தெரிய வேண் டுமா? இன்றைய ஐந்நூறு கோடி சனத்தொகையில் நானூறு கோடிக்கு மேற்பட்டவர் ஏதோ ஒரு சமயத்தைப் பின்பற்றுபவர்களாக உள்ளனர். சமயவாழ்வு நம் ஈழமண்ணில் இருத்தலவசியம். எதிர்கால மன்னர்களாகிய இன்றைய மாணவர்களாகிய நாம் எமது சமயத்தைப் பேணிப்பாதுகாத்து நன்மை பல பெறுவோமாக.

மாணவர்களுக்கு ஆலயவழிபாடும் மிக அவசியமான தொன்றாகும். உடல் வளர்ச்சிக்கு உணவு இன்றியமையாதது போல ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆலயவழிபாடு இன்றியமையாததாகும். ஆதியும் அந்தமும் இல்லா சோதிவடிமான நம் கடவுளை வணங்க உகந்த இடம் ஆலயம் ஆகும். ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்பது முதுமொழி.

ஆலயம் ஒரு புனிதமான இடம். ஆகையால், நாம் அங்கு செல்லும் போதும் புனிதமாக நீராடி. நெற்றியில் விபூதி பூசி, பூக்கள், இளநீர், பால் முதலிய அபிடேகப் பொருட்களை எடுத்துச் செல்லல் வேண்டும்,

நாம் ஆலயத்திற்குச் செல்லும் போதும் உயரமான கோபுரமே எம் கண்ணுக்கு முதலிலே புலப்படுகிறது. அக்கணமே கைகளைத் தலையின் மேல் வைத்து வணங்க வேண்டும். ஆலயத்தினுட் செல்லும் போது ஆலயத்துக் கிணற்று நீரில் கால்களைக் கழுவிக் கொண்டு ஆலயத்தினுட் செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திலே பூசை நடக்கும் போது பலிபீடத்திற்கு அப்பால் நின்றே வணங்க வேண்டும். முதலில் விநாயகப்பெருமானை மூன்று முறை எமது தலையிற் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டு வணங்க வேண்டும். ஆண்கள் அட்டாங்கநமஸ்காரம் அதாவது எட்டு அவயவங்களும் நிலத்திற் படும்படி வீழ்ந்து வணங்குவார்கள். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் அதாவது ஐந்து அவயவங்களும் நிலத்திற் படும்படி வீழ்ந்து வணங்குவார்கள். கடைசியில் சண்டேஸ்வரருக்குப் பூசை செய்ததும் மும்முறை கைதட்டி வணங்குதல் வேண்டும்.

பிரசாதம் வாங்கும் போது பிறரைத் தள்ளிக் கொண்டு செல்லாமல் அமைதியாக, ஒழுங்காக இருந்து வாங்க வேண்டும்.

நாம் வணங்கினால் மட்டும் போதாது. எம்மால் செய்யக் கூடிய திருத்தொண்டுகளையும் செய்வது மிகச் சிறந்ததாகும். பெரியோர்களும், நாயன்மார்களும் சிவத்தொண்டு செய்து இறைவன் அடி சேர்ந்தார்கள், நாமும் அதைப்போல் அவர்களின் வழியில் நடைபயில முயலுவோமாக! "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதற் கிணங்கச் சிவத்தொண்டு புரிந்து இறைவனடி சேர்வோமாக!

"சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை"

சமூகஜோதி கா. கணேசதாசன் J. P
(ஓய்வுபெற்ற அதிபர், கொழும்புத்துறை)


---

ஒரு பணக்காரனுக்குத் தோட்டமொன்று இருந்தது. அதில் இரண்டு தோட்டக்காரர்கள் இருந்தார்கள். ஒருவன் சோம்பேறி, வேலையே செய்யமாட்டான். ஆனால் எஜமான் தோட்டத்திற்கு வந்தாலபோதும், உடனே எழுந்து போய் கூப்பிய கைகளுடன் அவரிடம் 'இ என் எஜமானின் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது' என்று சொல்லியபடி அவர் முன்னால் பல்லை இளித்துக்கொண்டு நிற்பான். மற்றவன் அதிகம் பேசுவதே இல்லை, ஆனால் கடினமாக உழைப்பான். பலவகையான பழங்களையும் காய்கறிகளையும் சாகுபடி செய்து வெகுதொலைவில் வசிக்கும் அந்த எஜமானின் வீட்டிற்குச் சுமந்து கொண்டு செல்வான். இந்த இரண்டு தோட்டக்காரர்களுள் யாரை எஜமான் அதிகம் விரும்புவார்? சிவபெருமான்தான் அந்த எஜமான். இந்த உலகம் அவரது தோட்டம். இங்கே இரண்டு வகையான தோட்டக்காரர்கள் இருக்கிறார்கள். ஒரு வகையினர் சோம்பேறிகள், ஏமாற்றுக்காரர்கள், அவர்கள் எதுவும் செய்வதில்லை; சிவபெருமானின் அழகான கண்களையும் மூக்கையும் மற்ற அங்க அவயவங்களையும் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். ஏழைகளை, பலவீனர்களான எல்லா மனிதர்களை, விலங்குகள் மற்றும் அவருடைய படைப்பு அனைத்தையும் மிகுந்த கவனத்தோடு பராமரிப்பவர்கள் மற்றொரு வகையினர். இவர்களுள் யார் சிவபெருமானின் அன்பிற்கு உரியவர்கள்? நிச்சயமாக அவரது பிள்ளைகளுக்குச் சேவை செய்பவர்களே. தந்தைக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள், முதலில் பிள்ளைகளுக்குச் சேவை செய்ய வேண்டும். சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள், அவரது பிள்ளைகளாகிய இந்த உலக உயிர்கள் அனைத்திற்கும் முதலில் சேவை செய்ய வேண்டும். கடவுளின் தொண்டர்களுக்குச் சேவை செய்பவர்களே அவரது மிகச் சிறந்த தொண்டர்கள் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. இந்தக் கருத்தை மனத்தில் கொள்ளுங்கள். -சுவாமி விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத்தை யாசித்தவன்



ஈராறு ஆண்டுகள் வனவாசமாகக் கழித்த பாண்டவர்கள் அஞ்ஞாத வாசத்திற்காகத் திரௌபதியுடன் விராட நாட்டில் இருந்த பொழுது அவர்களின் மறைவிடத்தைக் காணமாட்டாத துரியோதனன் சூதாட்டத்திற் பறித்துக்கொண்ட பாண்டவர்களின் நாட்டை இழந்து விடுவோமோ என்று மனம் கலங்கி தனது மாமனாகிய சகுனியை அழைத்தான்.

மாமா! இப்பொழுது நாம் எப்படியாவது பாண்டவர்களை இனம் கண்டு பிடித்து விட்டால், மறுபடியும் அவர்களைப் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டிற்குத் துரத்தி விடலாமே என்றான் துரியோதனன். அதைக் கேட்ட சகுனி ஆமாம்! ஆமாம்! அப்படி ஒரு நிபந்தனையை அன்றே கூறி இருக்கின்றோம் என்றான். அப்படியாயின் அவர்களை மீண்டும் வனவாசத்திற்கு அனுப்புவதற்கு என்ன வழி செய்யலாம் என்று துரியோதனன் கேட்டான்.

சிறிது யோசித்து விட்டு மேலும் கீழுமாக நடைபோட்ட சகுனி "துரியோதனா!" உன்னுடன் கூடப்பிறந்த சகோதரி துச்சளையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரத்தியை யார் திருமணம் செய்து கொண்டார்கள்? அருச்சுனனின் மகன் "அல்லியின் அருமைப் புதல்வன் புலேந்திரன் எனது மருமகள் காலாந்தரியின் கணவன் என்றான்" அவர்கள் இருவரின் திருமணம் சிறுவயதில் நடந்தது. இப்பொழுது காலாந்தரி பருவமடைந்த நிலையில் தன் கணவனிடம் போவதற்கு இருக்கின்றாள் என்று கூறிய துரியோதனனைப் பார்த்துச் சகுனி "அல்லி தன் மருமகளைத் தன் நாட்டிற்கு அனுப்பி வைக்குமாறு தூது அனுப்பி இருக்கிறாள் ........ உன் சகோதரி ஏற்பாடும் செய்து கொண்டு இருக்கின்றாள்" அவளைக் காரணமாக வைத்துப் பாண்டவர்களை வனவாசத்துக்கு அனுப்புவோம் என்று கூறியதும், எப்படி? என்று துரியோதனன் கேட்டான்.

"உன் தங்கையின் புத்திரியை நாம் புதிதாகக் கட்டிய மாளிகையில் சிறைவைத்து என் நண்பன் கர்ணனைக் காவலுக்கு நியமித்து விடுவோம் என்றான். அதைக் கேட்ட துரியோதனன் பலமாகச் சிரித்து "அந்தச் சிறு பெண்ணைச் சிறை வைத்து விட்டால் பாண்டவர்களைக் கண்டு பிடித்துவிட முடியுமா என்ன? துரியோதனா! தன் மகனின் மனைவியைத் தன் நாட்டுப் பட்டத்து ராணியைத் தன்னிடம் தகுந்த மரியாதையுடன் அனுப்பி வைக்காமல், அவளை சிறை வைத்தால் அல்லி இராணிக்குக் கோபம் வரும். ஆவேசத்துடன் தம்மேற் படை எடுத்து வருவாள். கர்ணனை அவள் தோற்கடித்துக் காலாந்தரியை மீட்டுச் செல்ல முடியாது. அந்த நிலையில் அவளது பதியான அருச்சுனன் மறைந்திருக்கும் இடத்திலிருந்து வெளிப்பட்டு அவளுக்கு உதவ வருவான் என்று கூறிய சகுனியைத் துரியோதனன் கட்டித் தழுவி மகிழ்ந்தான்.

திட்டம் நிறைவேற முதல் கட்டம் தயாராகி விட்டது. "கர்ணா காலாந்தரியின் காவலுக்கு உன்னையே நியமிக்கின்றேன்" என்று துரியோதனன் ஆவலுடன் கட்டளை இட்டான். அதைக் கேட்ட கர்ணன் "மண்ணைக் காக்க வேண்டிய என்னைப் பெண்ணைக் காத்து நிற்க ஏவுகின்றாயே இது முறையா? என்றான். கர்ணா! இது என்னுடைய இரகசியத்திட்டம், இதில் நான் உன்னையன்றி வேறொருவரையும் நம்ப முடியுமா? சொல் என்றான் துரியோதனன். கர்ணனும் அவனது ஆணைக்குக் கட்டுப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லி ஆவேசத்துடன் தன் சேனைத் தலைவர்களுக்குக் கட்டளை இட்டாள். அதைக் கேட்ட புலேந்திரன் தன் அன்னையிடம் அம்மா! "இது என் பிரச்சினை உன் ஆத்திரம் அறிந்து தான் துரியோதனன் சதி செய்கின்றான். சதியைச் சதியால்தான் வெல்ல வேண்டும். அவர்கள் எதையோ மனத்தில் வைத்துக் கொண்டு சதி செய்கின்றார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது. போரிடாமல் அவர்கள் எண்ணத்தில் மண்ணைப் போட வழிகாண வேண்டும்'' என்ன வழி என்றாள் அல்லி.

''சம்சனை அழித்த கண்ணனைக் கலந்து ஆலோசனை செய்த பின்னர் அதன்படி நடப்போம்'' புலேந்திரன் ஓர் அந்தணனைப் போல் மாற வேடமணிந்து கர்ணனைக் காண வேண்டும் என்று மாளிகையின் காவலாளியிடம் கேட்டுக் கொண்டான். வெளியே வந்த கர்ணனிடம் ''யாசிப்பவனுக்கு இல்லையென்று சொல்லாத அங்க தேசத்து அதிபதியே ஏழை அந்தணன் வணங்குகின்றேன்'' என்றான். அதைக் கேட்ட கர்ணன் ''கொடுப்பதையே இலட்சியமாகக் கொண்ட என்னிடம் நீ நாடி வந்தது என்ன? பயப்படாமல் கேள்? என் உயிர் வேண்டுமானாலும் தருவேன்.'' கொடைவள்ளலே தங்களுயிரை விட மேலானது உங்கள் வீரம். அது தான் எனக்குத் தேவை'' பணிவாகக் கேட்டான் புலேந்திரன்.

"வாலிபனே பொன்னையும் பொருளையும் கேட்காமல் என் வீரத்தைக் கேட்கின்றாயே! அதிசயமாக இருக்கின்றது. என் வீரம் உனக்கெதற்கு'' கேட்கின்றவன் எதைக் கேட்கின்றானோ அதைக் கொடுப்பதுதான் உங்களது செயல், ஆகையால் நான் கேட்பதை உங்களால் கொடுக்க முடியுமா? என்ற புலேந்திரனைப் பார்த்து "வாலிபனே நிறுத்து உன் பேச்சை, எனது வீரத்தை உனக்குத் தந்தேன், என் வீரம் உனக்கே உரியது எடுத்துசெல்'' என்றான்.

அதைக் கேட்ட புலேந்திரன் மன்னனே "வீரம் என்பது உங்கள் திறமை உடலின் அங்கம் போல் இருக்கும் தன்மை அதை உங்களால் கொடுக்க முடியாது'' ஆகையால் உங்களது வில்லையும் அம்புக் கூட்டையும் என்னிடம் கொடுங்கள். நான் வந்த வேலை முடிந்ததும் உங்கள் பொருளை ஒப்படைக்கின்றேன். ஆச்சரியப்பட்ட கர்ணன், அதிசயமான யாசகமாய் இருக்கிறதே நீ கேட்பது இப்பொழுதாவது காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா? என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டான். அதற்கு புலேந்திரன் என்னையும் என்னில் சரி பாதியாகிய என் மனைவியையும் சேர விடாமல் பிரிக்கும் சதிகாரர்களை விட்டு அடிக்கவோ உங்கள் வில்லைக் கேட்டேன். எங்களைப் பிரிப்பது முறையா? என்றான். "வாலிபனே நீ உன் மனைவியுடன் சேர்வதற்கு என்வில் உதவுமானால் நான் பாக்கியசாலி ஆவேன். போ உன் காதலியை மீட்டு சுகமாய் வாழ்."

புலேந்திரன் மாளிகைக்குள் ஓடினான். அடுத்த சில கணங்களில் காவேந்திரியுடன் கையைப் பிடித்துக் கொண்டு கர்ணனின் முன் வந்து நின்றான். எங்கள் இருவரையும் சேரவிடாமல் சதி செய்த உங்கள் நண்பரின் திட்டத்தை மற்றொரு சதியால் வென்றி கொண்டேன். உங்களது வில்லையும் அம்புக்கூட்டையும் இங்கேயே விட்டுச் செல்கின்றேன். எங்களை ஆசி கூறி அனுப்புங்கள், நாளை நான் காவேந்திரியின் கணவன் என்று சொன்ன புலேந்திரன் மறைத்து வைத்திருந்த தனது இரதத்தில் மனைவியுடன் தன் நாட்டிற்குச் சென்றான். செய்வதறியாமல் சிலையாகிப் போய் நின்றான கர்ணன்.

சதியை சதியால் வெல்ல வழி வகுத்துக் கொடுத்த கண்ணனின் பாதங்களைத் தொழுது நின்றனர் புலேந்திரன் தம்பதிகள். எல்லாம் தெரிந்த மாயக் கண்ணன் புன்னகையோடு தன்னை வணங்கியவர்களை வாழ்த்தி நின்றான். பிரிந்தவரை மறந்து சதி செய்த சகுனிக்கு எந்தச் சக்தி தன் திட்டத்தை முறியடித்தது என்று புரியாமல் திகைத்து நின்றான்.

தொகுப்பு;
சந்நிதியான் ஆச்சிரமம்.

"என் செயலாவது யாதொன்றுமில்லை" என்னும் கொள்கை மனத்தில் உறுதியாக நிலைக்குமானால், மனிதனுக்கு இந்தப் பிறவியிலேயே முக்தி கண்டதாகும். அதன் பிறகு அவனுக்கு வேறொரு பயமுமில்லை.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளா அடிமை

மிஞ்சு தமிழ்ப் பாடல்களால் தோழமை மார்க்க நெறியில் இறைவனோடு தொடர்பு வைத்த அருளாளராக சுந்தரமூர்த்தி சுவாமிகள் காணப்படுகிறார். இவர் சோழநாட்டின் திருநாவலூரிலே அந்தணர் குலத்திலே சடையனார், இசைஞானியார் செய்த தவத்தின் பலனாக திருஅவதாரம் செய்தார். முப்போதும் சிவனைத் திருமேனி தீண்டிப் பூசிக்கின்ற தவ வாய்ப்பு பெற்ற சிவாச்சாரியாராகிய சடையனாரும், அவருடைய தர்மபத்தினியாக கற்பு நெறி தவறாது வாழ்ந்த இசைஞானியாரும் இந்த உலகத்தில் தீமையானது அகன்று நன்மை செழிக்கச் செய்வதற்காக பெற்றெடுத்த தவக்குழந்தையே சுந்தரர் என்பதை பின்வரும் பெரியபுராணப் பாடல் விளக்குகிறது

''மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றிமேம்படு சடையனார்க்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கைமனை இசைஞானியார் பால்
தீதகன்றுலகம் உய்யத் திரு அவதாரம் செய்தார்.

கலியுக வரதனாகிய கந்தவேள் பெருமானை 'அழகன்' என அடியார்கள் ஆராமையோடு அழைப்பார்கள். கருவிலே திரு உள்ளவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அழகும் அறிவும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவராக வளர்ந்து வந்தார். இவருடைய தோற்றப் பொலிவாலும் அழகாலும் கவரப்பெற்ற நரசிங்கமுனையர் என்னும் சிற்றரசர் இவரை வளர்த்து வந்தார். அரசருக்குரிய கோலமும் அந்தணருக்கு உரிய சீலமும் கொண்டு இவர் வளர்ந்து வந்தார் என்பதை ''மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க ''எனப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது. இறைவன் சுந்தரரைத் தோழனாக ஏற்றுக் கொண்டதால் இவருக்குத் தம்பிரான் தோழன் என்ற திருநாமமும் கிடைக்கப் பெற்றது. சுந்தரரைத் திருமணப் பந்தலிலே தடுத்தாட் கொண்ட பொழுது இறைவனுக்கும் சுந்தரருக்கும் இடையே நடந்த உரையாடலை பெரியபுராணம் மிக அழகாகச் சித்தரிக்கிறது. அடிமை ஓலையை இறைவன் காட்டியதும் சீற்றம் கொண்ட சுந்தரர் கோபாவேசத்துடன் இறைவனைப் பார்த்து 'பித்தன்' என்று கூறியதை பெரிய புராணம் பின்வருமாறு சித்தரிக்கிறது.

''மாசிலாமரபில் வந்த வள்ளல் வேதியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியால் சிரிப்பு நீங்கி
ஆசிலந்தணர்கள் வேறோரந்தணர்க்கடிமை ஆதல்
பேச இன்றுன்னைக் கேட்டோம் பித்தனோ மறையோய்'' என்றார்.

இறைவன் தெய்வ சாந்நித்தியத்தோடு வீற்றிருந்து அருள் புரியும் இடம் கோயில் என்பதை சுந்தரரைத் தடுத்தாட் கொண்டு திருவெண்ணெய் நல்லூருக்கு கூட்டிச் சென்று மறைந்ததின் ஊடாக அனைவருக்கும் உணர்த்தியுள்ளார். தமிழிலே திருமுறை பாடுதல் இறைவனுக்குச் செய்கின்ற அர்ச்சனை என்பதை ''அர்ச்சனை பாட்டே ஆகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடும் வாயசர் எனப் பெரிய புராணம் சித்தரிக்கிறது. இறைவனிடம் அன்பு கொண்ட அடியவர்கள் அன்புப் பாசையால் இறைவனை உரிமையோடு அழைப்பார்கள், இறைவனுடைய வேண்டுதலை ஏற்று இறைவன் மீது சுந்தரர் பாடிய முதலாவது பதிகம் "பித்தாபிறைசூடி பெருமானே அருளாளா" என்பதாகும்.

இறைவன் வெளிப்படும் இடங்களில் சிவனடியார்களும் ஒன்றாகும். சிவனடியார்களின் பெருமையை திருத்தொண்டர் தொகையில் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளே அறிமுகம் செய்து வைக்கிறார். ஞானசம்பந்தரை 'எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்' என்றும் அப்பர் பெருமானை "திருநாவுக்கரையன்றன் அடியார்க்கும் அடியேன்" என்றும் திருமூலரை "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என்றும் கண்ணப்பரை "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்" என்றும் திருத்தொண்டர் தொகையில் குறிப்பிடுகிறார். தென் நாடு செய்த தவத்தின் காரணமாகவும் திருத்தொண்டர் தொகையாகிய சிறந்த நூலைத் தருவதற்காகவும் சுந்தரர் திருஅவதாரம் செய்தார் என்பதை "மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத் தீதிலாத திருத்தொண்டத் தொகை தர" எனப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது. தில்லையிலே திருநடனம் புரியும் நடராஜப் பெருமானின் திருக்கூத்து தரிசனத்தைக் கண்டு கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரிய சுந்தரர் நிற்கும் காட்சியை "தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று" என்ற பெரியபுராணப் பாடல் விளக்கி நிற்கிறது.

நாம் செய்த கர்மவினைக்கேற்பவே நமக்கு பிறவி கிடைக்கிறது. செய்தவினையை நாம் ஒவ்வொருவரும் அனுபவித்தே தீர வேண்டும் என்றே இந்து சமய தத்துவம் கூறுகிறது. திருக்கைலாயத்தில் சுந்தரர் கமலினி, அனிந்திதை என்ற பெண்கள் மீது மையல் கொண்டார். உலகியல் இன்பத்தில் பற்றுக் கொண்ட கமலினி பரவையாராகவும், அனிந்திதை சங்கிலியாராகவும் பூவுலகத்தில் தோன்றினார்கள். திருவாரூர் தியாகராஜப் பெருமானுடைய சந்நிதானத்தில் பரவையாரைக் கண்ட சுந்தரர் அவர் மீது மையல் கொண்டு காதல் வசப்பட்டு நிற்கும் காட்சியை "கற்பகத்தின் பூங்கொம்போ காமன் தன் பெருவாழ்வோ" என்ற பெரியபுராணப் பாடலும் அழகன் முருகன் தான் சுந்தரனாக வந்திருக்கிறானோ என ஏங்கி நிற்கும் பரவையின் மன நிலையை "முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ பெருகொளியால்" என்ற பெரிய புராணப் பாடலும் தத்ரூபமாக இயக்கி நயத்துடன் இவர்களிடம் ஏற்பட்ட காதல் உணர்வை வெளிப்படுத்துவதை காணக்கூடியதாக உள்ளது.

தோழமை நெறியில் இறைவனோடு தொடர்பு கொண்ட சுந்தரர் உரிமையோடு இறைவனிடம் பொன் பொருள் கேட்டுப் பெற்றுக் கொண்டதை "செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொருநாள் இரங்கீர்" என்ற பாடல் வரிகள் உணர்த்தி நிற்கிறது. இறைவனிடம் பெற்ற நெல்லை வீட்டிற்கு கொண்டு வந்து சேர்ப்பதற்கு "நீள நினைந்தடியேன் உனை நித்தலும் கைதொழுவேன்" என்ற பாடலைப் பாடி பூதகணங்களை உதவிக்காகப் பெற்றார் என சுந்தரரின் வரலாறு கூறுகிறது. திருவொற்றியூரிலே சுந்தரர் சங்கிலியாரைத் திருமணம் செய்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலியாருக்கு கொடுத்த சத்தியத்தை மீறியதால் இவருக்கு இரு கண்களும் குருடாயின. கண்பார்வையை இழந்த நிலையில் சுந்தரர் பாடிய பாடல்கள் அவருடைய பக்தி வைராக்கியத்தை வெளிப்படுத்திக் காட்டும் பாடல்களாக அமைந்துள்ளன. அடியவர்களின் துன்பத்தை ஆண்டவன் தீர்க்காவிட்டால் அவரை வழிப்படுவதால் யாது பலன்? என அன்புப் பாசையால் இறைவனோடு சுந்தரர் மோதுவதை அவருடைய பின்வரும் பாடல் விளக்குகிறது.

மீளா அடிமை உமக்கே ஆளாய்
பிறரை வேண்டாதே மூளாத்தீப்போல்
உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாங்கிருப்பின் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால் வாளாங்கிருப்பின்
திருவாரூரில் வாழ்ந்து போதீரே.

சுந்தரருக்காக பரவையிடம் பரமசிவன் நள்ளிரவில் திருவாரூர் வீதியெல்லாம் நடந்து திரிகிறார். இறைவனை பெண்ணிடம் தூது அனுப்பிய சுந்தரரின் செய்கை மீது ஏயர்கோன்கலிக்காம நாயனார் வெறுப்புக் கொள்கிறார் ஏயர்கோனுக்கு சூல நோயை ஏற்படுத்தியதன் ஊடாக சுந்தரரின் பெருமையை அவருக்கு இறைவன் உணர்த்தி வைக்கிறார்.

சைவ நாற்பாத நெறியில் சுந்தரர் யோக நெறி நின்று இறைவனுடைய திருப்பாதங்களோடு இணைந்தார். இறைவனை உள்ளத்துள்ளே ஓர்ந்து உணர்வது யோகம் என்பதை ''ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்ளே நின்ற ஒண்பொருள் சேர்ந்தனன் சேர்ந்தனன்'' என்று பாடுவார் இறைவனை நாள்தோறும் சிந்திப்பவர்களின் சிந்தனையில் அவன் என்றுமே வாழ்வான் என்பதை ''சிந்தித்தென்றும் நினைந்தெழுவார்கள் சிந்தையில் எழும் சிவன் தன்னை'' என்று சிவனைப் போற்றுவார். அழகான பூக்களும் நீரும் கொண்டு இறைவனை நாடோறும் பூசிப்பவர்கருக்குத் தூய அறிவு உண்டாகும். அன்பர்களுடைய நெஞ்சத்தை இறைவன் கோயிலாகக் கொள்வான் என்பதை ''நறுமலர்ப் பூவும் நீரும் நாடொறும் வணங்குவார்க்கு அறிவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பன்'' என தனது பாடலில் குறிப்பிடுகிறார். இறைவனை நம்பிக்கையோடு வழிபட்டவர்கள் வாழ்விலே துன்பப்பட்டதில்லை என்பதை ''நம்பினார்க்கருள் செய்யும் கற்பகம் என்றும்'' ''அடியாரை ஊழ்வினை நலியவொட்டார்'' என்றும் தனது பாடலில் விளக்குகிறார். உலகாயதராக வாழ்பவரைப் பாடாதே உலகம் முழுவதையும் இயக்கும் பரம்பொருளையே பாடு என்பதனை

''பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்''

எனத் தனது பாடலில் குறிப்பிடுகிறார். இல்லற வாழ்வின் ஊடாகவும் இறைவன் பாதத்தை அடைய முடியும் என்பதற்கு சுந்தரரின் வாழ்வு உதாரணமாகக் காணப் படுகிறது. மானுட அணுகு முறைகளில் ஒன்றாகிய தோழமை நெறியின் ஊடாக இறைவனோடு இணைந்த சுந்தரரின் வரலாறு இறைவனுடைய பாதங்களோடு இணைய விரும்பும் மானுடர்களுக்கு திசைகாட்டும் வாழ்வாக அமைந்துள்ளது. அவருடைய தெய்வத் தமிழை ஊனும், உயிரும், உயிர்க்குயிராகிய இறைவனும் அனுபவித்துக் கொள்கிறார்கள் என்பதை இராமலிங்க சுவாமிகளின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

தேன்படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டைத்
தினந்தோறும் நான் படிக்கும் போது எனை
நானறியேன் நாவென்றோ? படிக்கும் உளம் படிக்கும் உயிரர்படிக்கும்
உயிர்க்குயிராம் தான் படிக்கும அனுபவம்
காண் தனிக்கருணைப் பெருந்தகையே

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம்
(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிப் பெருவிழா

22-09-1992 இல் எமது பேரவை ஆரம்பிக்கப்பட்ட பொழுது தீர்மானிக்கப்பட்ட முக்கிய விடயங்களில் சைவத்திற்கும், தமிழிற்கும் தொண்டாற்றுகின்ற பெரியார்களையும் மற்றும் கலைத்துறையில் சிறந்து விளங்குகின்றவர்களையும் ஊக்குவிக்கு முகமாக விருதுகளை வழங்கி அவர்களை கௌரவிப்பதையும் ஒரு நோக்கமாகக் கொண்டிருந்தது.

இதற்கு அமைவாக 1993 ஆம் ஆண்டிலிருந்து வைகாசிமாதத்தில் வைகாசிப் பெருவிழா என்ற பெயருடன் ஒரு விழாவை எமது பேரவை வருடா வருடம் நடாத்தி வருகின்றது. இந்த விழாவில் வைத்துத்தான் பேரவையால் தீர்மானிக்கப்படும் ஒருவருக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கோ விருதுகள் வழங்கப்படுகின்றன.

விருதுகள் வழங்கப்படும் பொழுது விருதின் தொடக்கம் ஞான பண்டித...... என்று தொடங்கி வழங்கப்படும். துறையைப் பொறுத்து அத்துறையைச் சுட்டிக் காட்டக் கூடியதாக அது முடிவடையும். மேலும் இந்த விருதுகள் வழங்கப்படும் பொழுது அது இரண்டு அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும்.

*சான்றிதழ்:-* இது விருது வழங்கப்படுகின்றவர்களின் சேவையை கௌரவித்து வாழ்த்தி வழங்கப்படுகின்ற ஒரு அழகான சான்றிதழாக அமையும். இதில் பேரவையின் சின்னம் இடம் பெற்றிருக்கும்

கேடயம்:- எமது பேரவையால் தனித்துவமாக வடிவமைக்கப் பட்ட நுணுக்கமான கலையம்சங்கள் நிறைந்த மிகப் பெறுமதிமிக்க ஒரு கேடயமாக இது அமைந்திருக்கும்.

## விருது வழங்கல் - 1993.

1993 ஆம் ஆண்டு விருதுகள் யாழ் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும் எமது பேரவையின் மதிப்பிற்குரிய தலைவராகவும் செயற்பட்ட பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கு வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விருதினைப் பெற்றோர் | | வழங்கப்பட்ட விருதுகள் |
|---|---|---|
| திரு க. முத்துவேல் | | ஞானபண்டித இயல் அரசு |
| திரு க. தணிகாசலம் | - | ஞானபண்டித ஆய்வரசு |
| திரு க. குமாரசாமி | - | ஞானபண்டித இசையரசு |



பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் 1994ம் ஆண்டு வைகாசிப் பெருவிழாவில் "ஞானபண்டித தமிழ்க்குரிசில்" விருதினைப் பெற்று பதிலுரை வழங்கும் காட்சி

## விருது வழங்கல் - 1994

1994 ஆம் ஆண்டு விருது எமது பேரவையின் முன்னாள் போஷகரும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பிரதம பூசகருமான திரு வி. இராஜேந்திரம் ஐயர் அவர்களால் வழங்கப்பட்டது.

| பெற்றுக் கொண்டவர் | விருது |
|---|---|
| பேராசிரியர் அ. சண்முகதாஸ் | ஞானபண்டித தமிழ்க்குரிசில் |

பேரவையால் விருதுகள் வழங்கப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் துறைகளில் தொடர்ந்தும் சிறந்த சேவைகளைச் செய்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களாகவும், தங்கள் துறைகளில் மேலும் உயர்வான நிலைகளை அடைகின்றவர்களாகவும் வளர்ந்து கொண்டிருப்பது எமக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

இறுதியாக 1996 ஆம் ஆண்டு பேரவையால் "ஞானபண்டித தமிழ்க்குரிசில்" என்ற விருது யாழ் பல்கலைக் கழகத்தில் தற்பொழுது கலைப் பீடாதிபதியாக விளங்கும் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அன்னார் தற்பொழுது இலங்கையில் மட்டுமின்றி உலகத்தில் தமிழர் வாழுகின்ற இடங்களில் எல்லாம் மதிக்கப்படுகின்ற, போற்றப்படுகின்ற தமிழ்ப் பற்றுள்ள ஒரு பெரியாராகவும், யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தை அலங்கரிக்கும் பீடாதிபதியாகவும் உயர்நிலையில் இருப்பது எமது பேரவைக்கு பெருமையளிப்பதாக உள்ளது. இதனால்தான் அந்த விருதினை வழங்கிய நிகழ்வில் அந்த விருதினை வழங்கிய பொழுது "நாங்கள் இந்த விருதினை வழங்குவதால் இந்தப் பெரியார் பெருமையடைகின்றார் என்பதுடன் இந்தப் பெரியாருக்கு விருதினை வழங்குவதால் எமது பேரவையும் பெருமையடைகின்றது" என்பதை மனம் திறந்து குறிப்பிட்டிருந்தோம்.

1998 ஆம் ஆண்டு கலைவிழா 14-06-98 ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் தவத்திரு முருகேசு சுவாமிகளின் ஞாபகார்த்தமாக சுவாமிகளின் அடியார்களினால் அமைக்கப்பட்ட அறுபத்து மூவர் குருபூசை மண்டபமும் திறந்து வைக்கப்படவுள்ளது.

த. அரியரத்தினம்
செயலாளர்
ச. ஆ. சை. க. ப. பேரவை

---

சிந்திப்போமா]

எமது முன்னோர்கள் ஆடுரோஞ்சு கல், சுமைதாங்கிக் கல், மிருகங்களின் தாகசாந்திக்கான தண்ணீர்த் தொட்டிகள் என்பவற்றைத் தெருவோரங்களில் அமைத்துத் தர்மசிந்தனையுடன் வாழ்ந்துள்ளார்கள்.

அதுமட்டுமல்ல அவர்கள் நல்லொழுக்க வழக்கத்தை, நல்ல பண்பாட்டை, நல்ல சமயநெறி முறைகளை எமக்குத் தந்து விட்டுப் போயுள்ளார்கள். இவற்றை நாம் பின்பற்றி நடக்கின்றோமா என்பது ஒருபுறமிருக்க அடுத்த சந்ததியினருக்கு வழிகாட்டக்கூடியதாக எவற்றை நாம் விட்டுச் செல்லப்போகின்றோம் எனவும் நாம் சிந்திக்க வேண்டும்.

நல்லை ஆதீனமுதல்வர் ஆற்றிய உரையிலிருந்து

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் பக்கம்

# 19ம் நூற்றாண்டு ஈழத்தமிழிலக்கியம்

கிறிஸ்த்தவர்களின் மதப்பிரசாரம் சுதேச மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியது போல அவர்கள் கற்ற ஆங்கிலக் கல்வியினாலும் சமுதாயத்தில் ஒருவித மாற்றமேற்பட்டது. மத்திய தர வர்க்கத்தினர் தம் பழக்க வழக்கங்கள், கல்வி முறை, நம்பிக்கைகள், தொழில்முறை முதலிய வற்றில் ஒருசிலமாற்றங்களை வேண்டி நின்றனர். அந்நிலைக்கேற்பவே சமுதாய சீர்திருத்தங்களும் வேண்டப்படலாயின. இத்தகைய பண்புகளைப் பிரதிபலிப்பனவாக பாவலர் துரையப்பா பிள்ளையின் பாடல்கள் அமைந்தன. 'யாழ்ப்பாண சுவதேசக்கும்மி' 'கீதரசமஞ்சரி' முதலிய நூல்களும் எங்கள் தேசநிலை முதலிய தனிப்பாடல்களும் அவரது ஆக்கங்களில் குறிப்பிடத்தக்கன.

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு என்று பாரதி பாடிய வகையில் அவரது பாடல்கள் காணப்பட்டன.

''தேசோபகாரங் கருதியிக் கும்மியைச்
செப்புகின்றேனாதலாலெவரும்
லேசாய் விளங்க இலகு தமிழில்
இயம்புவதே நலம் சங்கமின்னே''

என்று யாழ்ப்பாண சுவதேசக் கும்மி தொடங்கி, கிருஷிகம், கைத்தொழில் கூட்டுமுயற்சி, கல்வி, இலங்கைக்கொரு பல்கலைக் கழகம், தாய்மொழி, பெண் கல்வி, சுயபண்பாடு, புதுமைப் பெண், எங்கள் பழக்க வழக்கங்கள், சாதியும் சீதன வழக்கமும், மதுவிலக்கு முதலிய பல விடயங்களைப் பாடற்பொருளாகக் கொண்டுள்ளது. சுருங்கக் கூறின் சமுதாயப் பிரச்சினைகள் இலக்கியப் பொருளாக மாறு போக்கை இவற்றில் காண முடிகின்றது. சமுதாய ஏற்றத்தாழ்வு பற்றிக் குறிப்பிடும் பாவலர்

''சாதியேது காண் அதிலொரு
சைவமேது காண்'' என்று பாடுகின்றார்.

நாகரிகமான பெண்களை கிண்டல் செய்யும் போது

கொண்டைக்குப் பூச்சூடுங் குணம் போச்சு – நாடாக்
கொண்டு மயிர் முடிக்கும் கால மாச்சு
தண்டைப் பாதசரங்கள் தவிப்பாச்சு பெண்கள்
சப்பாத்துன் தொண்டி வரக் காலமாச்சு''

என்று பாடுவதை நினைவு கூரலாம்.

பாவலர் அவர்கள் இந்துசாதனம் என்ற பத்திரிகையின் துணையாசிரியராகப் பணியாற்றியவர், உதயதாரகை என்ற பத்திரிகையில் அவரெழுதிய ஆசிரிய தலையங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ங்கள் குறிப்பிடத்தக்கன. நாடகத் தமிழையும், இலக்கியத்தமிழையும், பேச்சுத் தமிழையும் அறிமுகப்படுத்தி 'சகல குண சம்பன்னன்' என்ற நாடகத்தையும் எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள் 'அனைத்தும் சிந்தனைச் சோலை' என்ற நூல் வடிவமாக வெளிவந்துள்ளது.

இந்நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர்களில் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை, ஏழாலை அட்டுவைச் சுப்பையா போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர். சமூகத்தின் குறைபாடுகளை பொருளாகக் கொண்டு ஆசுகவிபாடுவதில் திறன் வாய்ந்தவர். சமூக வரலாற்றுத் தேவையை நோக்கி இவரது பாடல்கள் வெளிக்கொணரப் படவேண்டும். ஏழாலைச் சுப்பையா பாடிய ''கணிகை புராணம்'' இக்கால இலக்கியத்தில் பொதுமக்கள் புகழ்நிலைக் குறித்து நிற்கின்றது. புலவர்கள் தலபுராணங்கள், அந்தாதிகள் என்று பாடிய மரபு, சுப்பையா அவர்களால் மாற்றப்படுகின்றது. வண்ணை சிவன் கோவில் தாசிகளின் ஒருத்தியை கதாபாத்திரமாகக் கொண்ட அந்த இலக்கியமே ''கணிகை புராணம்.'' இலக்கண இலக்கியங்களைப் பயின்றவரோ என்னவோ இயற்கையாக கவிபாடும் ஆற்றலுடையவராய் விளங்கினார். அவரது கவித்துவத்திற்கு உதாரணமாக

''காட்டுக்குயிலை வடிதோட்டி வைத்த நாவி நெய் தடவி
பாட்டு மிளிய சொல்லாலே மயங்கேனோ தையலின்னே
ஓட்டைக் காதினுடனிருந்து இங்கு வந்தே புடவை விற்கின்ற
நாட்டுக் கோட்டைச் செட்டிகளின் அல்லாண்டப் பணிவள் தானே,''

என்று பாடலைக் கூறலாம், தொடரும்.

இ. நடராசா

□

சுயநலம் கொண்டவன் எல்லா கோயில்களையும் வழிபட்டிருந்தாலும், புண்ணியத்தலங்கள் அனைத்தையும் பார்த்திருந்தாலும், சிறுத்தையைப்போல தன் உடம்பு முழுவதிலும் மதச் சின்னங்களைத் தீட்டிக் கொண்டிருந்தாலும் அவன் சிவபெருமானிடமிருந்து விலகியே இருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமையூட்டும் பசுந்தாட்பசளை

குன்றிப்போகும் மண்வளத்தை பேணுவதற்கும் உயர்வான அறுவடையை பெற்றுக்கொள்வதற்கும் பசுந்தாட் பசளைகளை உபயோகித்தல் சிறந்ததென ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன.

எமது நாட்டில் பசுந்தாட்பசளைக்குரிய தாவரங்களாக இலைமறைகாய் போல் பின்வரும் தாவரங்கள் காட்சியளிக்கின்றன.

அ) தெஸ்பீசியா பொபுலன்கா (பூவரசு)
ஆ) கசியா அவற்றா (சீமை அகத்தி)
இ) ரைத்தோனியா டைவேசிபோலியா (காட்டுச் சூரியகாந்தி)
ஈ) கலறொப்பிஸ் சிகன்ரியா
உ) சணல்
ஊ) காவிளாய்
எ) கிளிறிசிடியா மாகுயேற்றா (சீமைக்கிழுவை)

இத்தாவரங்களின் 5 அந்தர் பசுமைஇலைகள் 3 அந்தர் அமோனியம் சல்பேற்றுக்கு கிட்டத்தட்ட சமமானது. ஆதலால் விதைப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன் இவை நிலத்துக்கு சேர்க்கப்படுவது சிறந்ததாகும்

எமது பிரதேசத்தில் கிளிரிசிடியாவின் பயன்பாடு உணரப்படாமல் அழிந்து போகும் நிலையில் இருப்பது கவலைப்படத்தக்கது. எனவே இங்கு கிளிறிசிடியாவைப் பற்றி சற்று விரிவாக நோக்குவோம்.

(கிளிறிசிடியா மாகுயேற்றா (சீமைக்கிழுவை)

1) நடுகைக் காலம்:- மழை வருவதற்கு முன் நடுகையை அரம்பித்தல் சிறந்தது.

2) நடுகை முறைகள்:- வேலிகளில் வீதியின் இரு மருங்கிலும் அல்லது வயலைச் சுற்றி 3 , 4 அடி இடைவெளியில் 6 அடி துண்டங்களாக நடுதல்

3) பராமரிப்பு; -
   1) நிலத்தில் இருந்து 5 அடி வரை கிளைகள் உருவாகுவதைத் தடுத்தல்
   2) ஆரம்பத்தில் கால் நடைகளால் சேதம் ஏற்படாது பாதுகாத்தல்

4) பசுந்தாட் பசளையிடல்;- வருடத்தில் ஒன்று / இரண்டு தடவைகளில் கிளிறிசிடியா இலைகளை வெட்டி தடிகளை விட்டு குழைகளை நிலத்தில் பரவி மண்ணுடன் சேர்த்தல்.

நன்மைகள்

1) கடும் வறட்சியை தாங்கக்கூடியது.
2) துரிதமாக வளர்ச்சி அடையும்
3) கூடிய பராமரிப்பு தேவையில்லை
4) அதிகளவு பசும் இலைகளை உற்பத்தியாக்கும்
5) மிக விரைவாக சிதைவுற்று மண்ணுடன் சேரும்
6) 20% - 40% விளைச்சலைக் கூட்டவல்ல போசணையுள்ளது.
7) கால்நடை உணவாக பயன்படும்,
8) வேலிப்பயிராக பயன்படும்

எமது பிரதேசத்தில் காணப்படும் சீமைக்கிழுவையை சிறந்த முறையில் பயன்படுத்துவோமாக.

நன்றி.

தொகுப்பு;
செல்வி ந. அருந்தவராணி
(விவசாய டிப்ளோமா)
கொம்பந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English (Part 5)

Read the paragraph carefully and answer the Questions No 1 and 2

### *Mohan's Bicycle*

Mohan's bicycle has a flat tyre. He cannot ride it now. He has to repairing it. He has no money, so he is repairing himself. He has tested and found the puncture. He has a tube of solution and a piece of rubber. He is going to stick a patch on the puncture. When Mohan has repaired his bicycle, he can ride it again.

1) Fill in the blanks with Questioning words to form meaningful Questions

a. _____ happened to Mohan's bicycle?

b. _____ repairing Mohan's bicycle?

c. _____ he is repairing his bicycle himself?

d. _____ has he found in the tube?

e. _____ is he going to stick on the puncture?

f. _____ can Mohan ride his bicycle again?

(Make use of these words to form Questions. who, why, what, when you can use a word more than once)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) **Fill in the blanks to bring meaningful sentences,**

a. **Mohan has _____ the inner tube.**

b. **He has _____ _____ it**

c. **He has _____ the puncture**

d. **He is going to _____ a patch on the puncture**

e. **He is going to _____ his bicycle again**

**( use the following words to fill the above sentences )**

**stick, taken, found, to repair, ride.**

## Prepositions (உருபிடைச் சொற்கள்)

3) **Prepositions are short words usually Placed before nouns or pronouns to show places, positions, time and means.**

உருபிடைச் சொற்களாவன குறைந்த எழுத்துக்களைக் கொண்ட சொற்களாக இருக்கும். இவை பெயர்ச் சொற்களுக்கோ, பிரதிப் பெயர்ச் சொற்களுக்கோ முன் அமைந்து இடம், நிலை, காலம், வழிவகை ஆகிய வற்றைக் காட்டி நிற்கும். ஆங்கில இலக்கணத்தில் உருபிடைச் சொற்கள் மிகவும் முக்கியமானது. உதாரணமாக **in, on, under, into, by, at, for, since** என்று பல உண்டு. அடுத்து வரும் இதழ்களில் விபரமாக பார்ப் போம்.

**S. THURAIRAJAH**
(English tutor)

## AMPERSAND

The oldest sign & represents 'and' in English and is used in scores of languages indicating the same meaning. This is the only extant sign of the five thousand signs in the first ever system of shorthand invented about 63 B. C. by Mareus Trio of Rome.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்/வண் நாவலர் மகா வித்தியாலயம்

# ஆனி மாத வாராந்த நிகழ்வுகள்

05 - 06 - 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10·30 மணியளவில்

அறிமுகவுரை: திரு. சி. நாகலிங்கம்

(லிங்கம்ஸ் பந்தல் அமைப்பாளர், கரணவாய்)

சொற்பொழிவு: "திருப்பெருவடிவமும் சூரனும்"

வழங்குபவர்: புலவர் வை க. சிற்றம்பலம் (உடுவில் கிழக்கு. சுன்னாகம்)

---

12 - 06 - 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 30 மணியளவில்

அறிமுகவுரை: செல்வன் கு பாலசண்முகன்

(இந்து இளைஞர் கழகத்தலைவர், யாழ் / இந்துக்கல்லூரி)

சொற்பொழிவு: திருமுறைப்பாராயணம்

வழங்குபவர்கள்: "கோயில் வழிபாடு" செல்வன் கு. புரந்தரன்

"மனிதன் என்பவன் தெய்வமாகலாம்"

ஆசிரியர் திரு. ந தங்கவேல்

(இந்து இளைஞர் கழகப் பெரும் தலைவர்)

திருமுறைப் பாராயணம்

இந்து இளைஞர் கழக உறுப்பினர்கள்

(யாழ் / இந்துக் கல்லூரி)

---

19 - 06 - 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 30 மணியளவில்

அறிமுகவுரை: திரு. சு. திருப்பரங்கிரிநாதன்

(பேரவைத் தலைவர்)

விடயம்: இசை நிகழ்ச்சி.

வழங்குபவர்: திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா

(ஆசிரியை. இராமநாதன் கல்லூரி, மருதனாமடம்)

(பக்கவாத்திய சகிதம்)

---

26 - 06 - 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## ஞானச்சுடர் - மாத வெளியீடு

## ஆனி - 1998

வெளியீட்டுரை: திரு. சி. சண்முகம் - J. P.

(கணக்காய்வு அத்தியட்சகர் யாழ்மாவட்டம்)

ஆய்வுரை: புத்தொளி N. சிவபாதம் - J. P.

(ஆனைக்கோட்டை)

---

இவ்வண்ணம்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (ஜனவரி - ஒக்டோபர்) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அதுபற்றிய முடிவுகள் 1999 ஜனவரி மாத மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்கு பொருத்தமான, தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும் அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு:

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.**

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org